# பிறைம் லேண்டஸ் ரெசிடென்சீஸ் பீஎல்சீயின்
# அனைத்துப் பங்குதாரர்களுக்குமான அறிவித்தல்

**நிறுவனத்தின் 16ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒன்லைன் மூலம் செப்டெம்பர் 30ஆம் திகதி பி.ப 2.30க்கு நடைபெறவிருப்பதைப் பற்றிய அறிவித்தல்.**

தற்போது நாட்டில் காணப்படும் ஊரடங்கு.ஃ. முடக்கநிலை காரணமாக இந்த அறிவித்தலை பங்குதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்க முடியாமையையிட்டு வருந்துகிறோம். இந்த ஊரடங்கு.ஃ.முடக்கநிலை அரசாங்கத்தால் நீக்கப்பட்டதும உடனடியாகக் கூட்டம் பற்றிய அறிவித்தல் தங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறோம். எப்படியென்றாலும் அனைத்துப் பங்குதாரர்களினதும் உரிமைகளையும் பாதுகாத்துப் பேணும் வகையில் அவர்களை இக்கூட்டத்தில் பங்குபற்றும்படி அழைக்கும் இவ்வறிவித்தல் எவ்வித தப்பெண்ணமும் ஏற்படாதவகையில் அனைவருக்கும் சமவாய்ப்பளித்து இந்த பகிரங்க அறிவித்தல் சீஎஸ்ஈ(CSE) இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. (https://www.cse.lk/home/company-info/PLR.N0000/financial) அத்துடன் நமது இணைந்த இணையத்தளத்தில் (https://www.primeresidencies.lk/investor-relations) கூட்டம் பற்றிய அறிவித்தல் மற்றும் வருடாந்தப் பொதுக்கூட்டம் பற்றிய வழிகாட்டற் குறிப்புகள் மற்றும் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு ஒன்லைன் மூலம் பதிவுசெய்துகொள்ளும் முறைமை உட்பட தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பங்குதாரர்களைப் பதிவுசெய்யும் விபரங்கள், 2021இல் ஒன்லைன் பங்களிப்பு ஆகியவையும் பதிவேற்றப்பட்டுள்ளது.(விண்ணப்பப் படிவம்)

**வருடாந்தப் பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தல்**

பிறைம் லேண்ட்ஸ் ரெசிடென்சீஸ் பீஎல்சீ இன் பங்குதாரர்களுக்கான 16ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் ஒன்லைன் கூட்டமாக செப்டெம்பர் 30, 2021 அன்று பிற்பகல் 2.30க்கு இடம்பெறும். இக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**நிகழ்ச்சி நிரல்**

1. கூட்ட அறிவித்தல்
2. பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் மார்ச் 31, 2021இல் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான கணக்கறிக்கை மற்றும் கணக்காய்வாளர்கள் அறிக்கை ஆகியவை கவனத்தில் எடுக்கப்படுதல்.
3. நிறுவனத்தின் விதிமுறைகளின் 29(1)(b) விதிக்கமைய திருவாளர் எம். பெரேரா அவர்களை பணிப்பாளராக தெரிவுசெய்தல்.
4. நிறுவனத்தின் விதிமுறைகளின் 29(1)(b) விதிக்கமைய திருவாளர் டி. எச். களப்புகே அவர்களை பணிப்பாளராக தெரிவுசெய்தல்.
5. நிறுவனத்தின் விதிமுறைகளின் 29(1)(b) விதிக்கமைய திருவாளர் எஸ். எம்.எஸ்.எஸ் பண்டார அவர்களை பணிப்பாளராக தெரிவுசெய்தல்.
6. நிறுவனத்தின் விதிமுறைகளின் 29(1)(b) விதிக்கமைய திருவாளர் டி. சூரியாராச்சி அவர்களை பணிப்பாளராக தெரிவுசெய்தல்.
7. பட்டயக்கணக்காளர்களான Messrs BDO Partners ஐ நிறுவனத்தின் அடுத்துவரும் வருடத்துக்கான கணக்காய்வாளர்களாக மீள் நியமனம் செய்வதுடன் அவர்களது ஊதியம் தொடர்பான தீர்மானங்களை எடுக்க பணிப்பாளர்களுக்கு அதிகாரமளித்தல்
8. 2021, 2022 வருடங்களுக்கான பரிவுக் கொடைகள் மற்றும் நன்கொடைகளுக்கான பங்களிப்புகள் தொடர்பான தீர்மானங்களை எடுக்க பணிப்பாளர் சபைக்கு அதிகாரமளித்தல்.

**பிறைம் லேண்ட்ஸ் ரெசிடென்சீஸ் பீஎல்சீயின்**
பணிப்பாளர் சபையின் பணிப்புரையின் படி

பேல் கொன்சல்ட்டிங் (பிரைவட்) லிமிட்டட்
(ஒப்பமிடப்பட்டது)
செயலாளர்கள்
திகதி : செப்டெம்பர் 7, 2021

PRIME LANDS RESIDENCIES PLC
COMMITTED TO CREATING A BETTER PLACE ON EARTH